கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தூத்துக்குடி

அசல் வழக்கு எண். 102/2023

பி.வா.சா. 1

தேதி : 03.08.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | திரு ரமேஷ் குமார் | | தொழில் | | ஓய்வு பெற்ற பேராசிரியர் |
| த/பெ./ க/பெ | சுடலைமுத்து | | கிராமம் | | தூத்துக்குடி |
| வயது | 69 | | தாலுகா | | தூத்துக்குடி |

2023ம் ஆண்டு பாரதிய சாக்ஷிசிய அதினியம், பிரிவு 142(1) ன்படி 2026 ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 3 தேதி ( 1989ம் ஆண்டின் 44வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி மேற்படியாளரிடமிருந்து திருமதி கோ. சிவஸ்ரீ, B.Sc., B.L.,. கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, தூத்துக்குடி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைத்து இப்பிரமாண வாக்குமூலம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

1) இந்த வழக்கில் நான் பிரதிவாதி. பிரதிவாதி தரப்பில் 1ம் சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணைக்காக எழுத்து மூலமான நிருபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது. தயார் செய்த பிறகு ஒவ்வோரு பக்கத்திலும் படித்து பார்த்து சரி என்று தெரிந்து கொண்டு கையெழுத்து செய்துள்ளேன்.

2) எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| Sl. No. | Date | Exhibit Marked | Document | Remark |
|---|---|---|---|---|
| 1. | 03.09.1997 | பி.வா.சா.ஆ. 1 | கனகராஜ் என்பவர் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவண எண். 1 623/1997 | சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகல் |
| 2 | 29.06.2026 | பி.வா.சா.ஆ.2 | பிரதிவாதி பெயரில் உள்ள நிலத் தீர்வை ரசிது | அசல் |
| 3 | 09.07.2026 | பி.வா.சா.ஆ.3 | பிரதிவாதி பெயரில் உள்ள நிலத் தீர்வை ரசிது | அசல் |
| 4 | 15.02.2024 | பி.வா.சா.ஆ.4 | பிரதிவாதி கொடுத்த புகாருக்கு தட்டப்பாறை காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட மனு ரசீது எண் 30/2024 | அசல் |
| 5 | 12.07.2024 | பி.வா.சா.ஆ.5 | பிரதிவாதி கொடுத்த புகாருக்கு தட்டப்பாறை காவல் நிலையத்தில் வழங்கப்பட்ட மனு ரசீது எண் 145/2024 | அசல் |

3. சாட்சியத்தையும் ஆவணங்களையும் ஏற்று பிராதுவை தள்ளுபடி செய்ய வேண்டிக்கொள்கிறேன்.

வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.